Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளி, ஜனவரி 31, 2025 | இதழ் 293

# வளர்ச்சியடைந்த இந்தியா திட்டத்தை நோக்கிய பயணம் முழுவீச்சுடன் முன்னோக்கி செல்கிறது: பிரதமர்




சென்னை, 31 ஜனவரி 2025: வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் தனது அசைக்க முடியாத உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் 2025 ஜனவரியில் தான் நடத்திய ஒரு மாத கால நிகழ்ச்சிகளின் சிறப்புத் தொகுப்பை பிரதமர் திரு நரேந்திர மோடி பகிர்ந்து கொண்டுள்ளார்.

இந்த மாதம் முழுவதும், இந்தியாவின் வளர்ச்சி மற்றும் சர்வதேச நிலைப்பாட்டை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட குறிப்பிடத்தக்க கொள்கை முடிவுகள், உலகளாவிய ராஜதந்திர ஈடுபாடுகள் மற்றும் மாற்றம் ஏற்படுத்தும் முயற்சிகளில் திரு மோடி தீவிரமாக ஈடுபட்டார்.

இது குறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் தமது நிகழ்ச்சிகள் குறித்த விரிவான தகவல்களைத் திரு மோடி, பகிர்ந்துள்ளார்.

"2025 ஜனவரி மாத படங்கள் ...

வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிய பயணம் முழுவீச்சுடன் முன்னேறுகிறது!

# சென்னையில் நெய்வேலி அனல் மின் நிலையத்தின் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து மத்திய நிலக்கரி, சுரங்கத் துறை அமைச்சர் திரு ஜி.கிஷன் ரெட்டி ஆய்வு செய்தார்



சென்னை, 31 ஜனவரி 2025: மத்திய நிலக்கரி, சுரங்கத்துறை அமைச்சர் திரு ஜி.கிஷன் ரெட்டி, மத்திய நிலக்கரி அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் திருமதி விஸ்மிதா தேஜ் உடன் இணைந்து சென்னையில் 30.01.25 அன்று நெய்வேலி அனல் மின் நிலைய திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டத்தை நடத்தினார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் என்.எல்.சி.ஐ.எல் நிறுவனத்தின் செயல் இயக்குநர்கள், உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அப்போது பேசிய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி, 2047-ம் ஆண்டுக்குள் "வளர்ச்சியடைந்த இந்தியா" உருவாக்குவதில் பிரதமரின் பரந்த தொலைநோக்குப் பார்வையை எடுத்துரைத்தார். இந்தியாவில் சிறப்பாக செயல்படும் பொதுத்துறை நிறுவனங்களில் ஒன்றாக என்.எல்.சி.ஐ.எல் திகழ்கிறது என்று அவர் பாராட்டினார். புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் இந்நிறுவனம் பெரிய அளவில் பன்முகப்படுத்தப்பட்டதற்கு பாராட்டு தெரிவித்த அவர், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் 1 ஜிகாவாட் அளவைக் கடந்த நாட்டின் முதல் பொதுத்துறை நிறுவனம் இது என்று கூறினார்.

தாளபிரா, தெற்கு பச்வாரா, வடக்கு தாடு, மச்சகட்டா மற்றும் பத்ரபாரா ஆகிய இடங்களில் உள்ள நிலக்கரி சுரங்கங்கள் மூலம் நிலக்கரி சுரங்கத் தொழிலில் திறன் அதிகரிப்பதில் என்.எல்.சி.ஐ.எல் முயற்சியை அமைச்சர் பாராட்டினார். பிரதமரால் திறந்து வைக்கப்பட்ட தாளபிராவில் 3 * 800 மெகாவாட் அனல் மின் திட்டத்தை நிர்மாணிப்பதில் என்.எல்.சி.ஐ.எல் மேற்கொண்ட முயற்சிகளையும் அவர் பாராட்டினார். ராஜஸ்தான், அசாம் ஆகிய மாநிலங்கள் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகள் யூனியன் பிரதேசம் ஆகியவற்றில் பெரிய அளவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை அதிகரிப்பதிலும், இதர பசுமை முன்முயற்சிகளிலும் என்.எல்.சி.ஐ.எல் நேர்மையான முயற்சிகளுக்கு அமைச்சர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

குழந்தைகள் மற்றும் மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஏராளமான ஆற்றலையும் வாய்ப்புகளையும் கொண்ட சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான வழிகளை ஆராயுமாறு என்.எல்.சி.ஐ.எல் க்கு அவர் அழைப்பு விடுத்தார்.

என்.எல்.சி இந்தியா நிறுவனத்தின் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு உயர்த்தப்பட்ட விபத்து காப்பீட்டுத் திட்டத்தை இரண்டு மாத காலத்திற்குள் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு என்.எல்.சி.ஐ.எல் நிர்வாகத்திடம் மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் நெய்வேலியில் என்.எல்.சி இந்தியா நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட "பாரம்பரியம்" என்று பெயரிடப்பட்ட அருங்காட்சியகத்தை மெய்நிகர் முறையில் திறந்து வைத்தார்.

"என்.எல்.சி.ஐ.எல் விங்ஸ்" என்ற புதிய மொபைல் செயலி மற்றும் என்.எல்.சி.ஐ.எல் இணைய வலைத்தளத்தின் புதிய பதிப்பையும் அவர் தொடங்கி வைத்தார்.




# குஜராத் மாநிலத்தில் புதிய குற்றவியல் சட்டங்களை அமல்படுத்துவது குறித்து உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா ஆய்வு



சென்னை, 31 ஜனவரி 2025: குஜராத் மாநிலத்தில் மூன்று புதிய குற்றவியல் சட்டங்களையும் அமல்படுத்துவது குறித்த ஆய்வுக் கூட்டம் உள்துறை மற்றும் கூட்டுறவு அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் குஜராத் மாநில முதலமைச்சர் திரு பூபேந்திர படேல் கலந்துகொண்டார்.

குஅராத்தில் காவல்துறை, சிறைச்சாலை, நீதிமன்றங்கள், வழக்குத் தொடுப்பது, தடயவியல் தொடர்பான பல்வேறு புதிய விதிகளின் அமலாக்கம் குறித்து இக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் உள்துறை இணையமைச்சர், செயலாளர், அம்மாநில தலைமைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர், தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் தலைமை இயக்குநர், மத்திய உள்துறை அமைச்சகம் மற்றும் மாநில அரசின் பல உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் பேசிய திரு அமித் ஷா, மூன்று புதிய குற்றவியல் சட்டங்களின் விதிகள், எந்தவொரு வழக்கிலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதிலிருந்து உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும் வரை மூன்று ஆண்டுகளுக்குள் நீதி வழங்கும் வகையில் உள்ளதாகத் தெரிவித்தார்.

புதிய குற்றவியல் சட்டங்களை அமல்படுத்துவதில் குஜராத் மாநில அரசின் பணிகளைப் பாராட்டிய திரு ஷா, 2025 ம் ஆண்டு ஏப்ரல் 30 ம் தேதிக்குள் அனைத்து ஆணையரக அலுவலகங்களிலும் புதிய குற்றவியல் சட்டங்களை அமல்படுத்துவதை அம்மாநில அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும், விரைவில் மாநிலம் முழுவதும் இச்சட்டங்களை அமல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டம் அம்மாநில முதலமைச்சர், உள்ளாட்சித்துறை அமைச்சர், அம்மாநில தலைமைச் செயலாளர், கூடுதல் தலைமைச் செயலாளர் (உள்துறை), காவல்துறை தலைமை இயக்குநர் ஆகியோர் நிலையில் மாதம் இருமுறை மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

10 ஆண்டுகளுக்கும் கூடுதலான தண்டனை சம்பந்தப்பட்ட 92 சதவீத வழக்குகளில் சரியான நேரத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதில் குஜராத் மாநில அரசு பாராட்டத்தக்க வகையில் சாதனை படைத்துள்ளது என்று திரு அமித் ஷா கூறினார். எஞ்சியுள்ள வழக்குகளுக்கு, நீதிமன்றத்தில் அனுமதி பெற சட்டத்தில் உள்ள விதிமுறையைப் பயன்படுத்துவதை உறுதி செய்ய மறுஆய்வு நடத்தப்பட வேண்டும் என்று திரு அமித் ஷா வலியுறுத்தினார்.

# தில்லியில் குளிர்காலத்தில் 56 நாட்களுக்குள் வீடற்ற 474 பேர் இறந்தது குறித்து தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரிக்கிறது

சென்னை, 31 ஜனவரி 2025: தன்னார்வத் தொண்டு நிறுவனமான முழுமையான வளர்ச்சிக்கான மையம் (சிஎச்டி) அளித்த தகவலின்படி, தில்லியில் இந்த குளிர்காலத்தில் 56 நாட்களுக்குள் சுமார் 474 பேர் உயிர் இழந்துள்ளதாக ஊடகத்தில் வெளியான செய்தி குறித்து தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து வழக்காக எடுத்துக்கொண்டு விசாரிக்கிறது. கம்பளி ஆடைகள், போர்வைகள், போதுமான தங்குமிடங்கள் போன்ற அத்தியாவசிய பாதுகாப்பு உதவிகள் கள் கிடைக்காததால் இந்த உயிரிழப்புகள் 2024 டிசம்பர் 15 முதல் 2025 ஜனவரி 10 வரை நிகழ்ந்துள்ளன.

தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் தகவலின்படி, தில்லியில் அடையாளம் காணப்படாத சடலங்களில் சுமார் 80 சதவீதம் பேர் வீடற்றவர்கள் என்று கூறப்படுகிறது.

செய்தி அறிக்கையின் உள்ளடக்கங்கள், உண்மையாக இருந்தால், இது கடுமையான மனித உரிமை மீறலாக இருக்கும் என்று ஆணையம் கருத்துத் தெரிவித்துள்ளது. னுனவே,

இந்த விவகாரம் குறித்து ஒரு வாரத்திற்குள் விரிவான அறிக்கை அளிக்குமாறு தலைமைச் செயலாளர் மற்றும் தில்லி காவல் துறை ஆணையருக்கு ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

2025 ஜனவரி 16 அன்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையின்படி, தேசியத் தலைநகரில் உள்ள பல தங்குமிடங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிலையில் இல்லை. வெப்பமூட்டி, வெந்நீர் போன்ற அத்தியாவசிய வசதிகள் இல்லாததால், தனிநபர்கள் கடுமையான குளிருக்கு ஆளாகின்றனர்.

தெருக்களில் வசிக்கும் மக்களில் குறிப்பிட்ட சிலரை மேற்கோள் காட்டி, சுவாச நோய்த் தொற்றுகள், தோல் நோய்கள், மன அழுத்தம் உள்ளிட்ட பல பாதிப்புகளை அவர்கள் எதிர்கொள்வதாக ஊடகத்தில் செய்திகள் வெளியானது.

# மகாத்மா காந்தி நினைவு நாள்: ஜனாதிபதி மரியாதை



சென்னை, 31 ஜனவரி 2025: காந்தியடிகளின் நினைவு நாளையொட்டி புதுடெல்லியில் உள்ள அவரது நினைவிடத்தில் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

நாடு முழுவதும் மகாத்மா காந்தியின் நினைவு நாள் இன்று அனுசரிக்கப்படுகிறது. இதையொட்டி அரசியல் தலைவர்கள் மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தும், உருவப்படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தியும் வருகின்றனர்.

இந்த நிலையில், காந்தியடிகளின் நினைவு நாளையொட்டி புதுடெல்லி ராஜ்காட்டில் உள்ள அவரது நினைவிடத்தில் ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத் சிங், மனோகர் லால் கட்டார்,

எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, முப்படைகளின் தலைவர்கள் உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

வெள்ளி,
ஜனவரி 31, 2025

# பிரபல ஒளிப்பதிவாளர் ரவிவர்மன் உலகப் புகழ் பெற்ற அமெரிக்க ஒளிப்பதிவாளர் சங்கத்தின் (ஏஎஸ்சி) உறுப்பினராக ஏற்பு.



சென்னை, 31 ஜனவரி 2025: சர்வதேச புகழ் பெற்ற, உலகின் முன்னணி ஒளிப்பதிவாளர் அமைப்பான அமெரிக்க ஒளிப்பதிவாளர் சங்கத்தின் (ஏஎஸ்சி) உறுப்பினராக பிரபல ஒளிப்பதிவாளர் ரவிவர்மன் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

அமெரிக்கர் அல்லாத, வெளிநாட்டில் வசிக்கும் ஒளிப்பதிவாளர்கள் இந்த அங்கீகாரத்தைப் பெறுவது என்பது மிக மிகக் கடினமான ஒன்றாகும். பல ஆஸ்கர் விருதுகளை வென்ற ஒளிப்பதிவாளர்கள் ஒரு ஒளிப்பதிவாளரின் படங்களை பார்த்து அந்த ஒளிப்பதிவின் தரத்தை சோதித்து அதைப்பற்றி ஆலோசித்து அதற்குப் பிறகு தான் கூட்டாக இந்த அங்கீகாரத்தை வழங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய விருது உள்ளிட்ட பல்வேறு உயரிய பெருமைகளை ஏற்கனவே பெற்றுள்ள ரவிவர்மன், பெரிதும் மதிக்கப்படும் ஏ எஸ் சி உறுப்பினராக ஏற்கப்பட்டதைத் தொடர்ந்து திரையுலகினர் மற்றும் பல்வேறு தரப்பினர் அவருக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த ரவிவர்மன், "ஏ எஸ் சி என்று அழைக்கப்படும் அமெரிக்க ஒளிப்பதிவாளர் சங்கத்தின் உறுப்பினராக என்னை இணைத்துக் கொண்டதற்காக அதன் தலைமை மற்றும் குழுவினருக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். உலகம் எங்கும் இருக்கின்ற ஒளிப்பதிவாளர்கள் இந்த சங்கத்தில் இணைவதைக் கனவாக கொண்டிருப்பார்கள். ஆஸ்கர் உள்ளிட்ட விருதுகளை வென்ற உலகின் முன்னணி ஒளிப்பதிவாளர்கள் உறுப்பினர்களாக இயங்கும் தளத்தில் நானும் இடம் பெற்றிருப்பது மிகுந்த மகிழ்ச்சியையும் பெருமையையும் அளிக்கிறது," என்றார்.

கடந்த 25 ஆண்டுகளில், தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி மற்றும் ஆங்கில படங்களில் சிறந்த ஒளிப்பதிவை ரவிவர்மன் வழங்கி இருக்கிறார். இந்தியாவின் தலைசிறந்த இயக்குநர்கள் அனைவரோடும் அவர் பணி புரிந்திருக்கிறார். 'பொன்னியின் செல்வன்', 'தசாவதாரம்', 'வேட்டையாடு விளையாடு', 'பர்பி', 'சஞ்சு', போன்ற பல படங்களுக்கு ரவிவர்மன் ஒளிப்பதிவு செய்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஒளிப்பதிவாளர் சங்கத்தின் உறுப்பினர் ஆகும் இரண்டாவது இந்தியர் என்ற பெருமையை பெற்றார் ரவிவர்மன். இதற்கு முன்னர் ஒளிப்பதிவாளர் சந்தோஷ் சிவன் மட்டுமே இந்தச் சங்கத்தின் உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

# இ லவுன்ஜ் மற்றும் நாய்ஸ் அண்டு கிரைன்ஸ் இணைந்து வழங்கும் பிரபல பாடகி சித்ரா பங்குபெறும் பிரம்மாண்ட இசை நிகழ்ச்சி



சென்னை, 31 ஜனவரி 2025: இ லவுன்ஜ் மற்றும் நாய்ஸ் அண்டு கிரைன்ஸ் இணைந்து வழங்கும் பிரபல பாடகி சித்ரா பங்குபெறும் பிரம்மாண்ட இசை நிகழ்ச்சி சென்னை நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் பிப்ரவரி 8 அன்று ரசிகர்கள் முன்னிலையில் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியை முன்னிட்டு குழுவினர் பத்திரிக்கை ஊடக நண்பர்களைச் சந்தித்தனர்.

திரையுலகில் 47 வருடங்களைக் கடந்து, 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி, மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்தவர் பாடகி சித்ரா. "சின்னக்குயில் பாடும் பாட்டு கேட்குதா" பாடல் பட்டி தொட்டியெங்கும் புகழ்பெற்ற நிலையில், இவர் சின்னக்குயில் சித்ரா என்றே மக்களால் அன்போடு அழைக்கப்பட்டு வருகிறார். இவர் முதன் முறையாகத் தனது ரசிகர்களைக் குஷிப்படுத்தும் வகையில், இந்த இன்னிசை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த பத்திரிக்கை சந்திப்பு நிகழ்வினில்....

இ லவுன்ஜ் ஈவென்ட்ஸ் சார்பில் வெங்கட் பேசியதாவது...

இந்த ஆண்டில் வரும் பிப்ரவரி 8ம் தேதி சென்னை ஒய்எம்சிஏ நந்தனம் மைதானத்தில், இந்த லைவ் இன் கான்சர்ட் நடக்கவுள்ளது. இது இன்னிசை நிகழ்ச்சி அல்ல, நம் அனைவருக்கும் பிடித்த சித்ரா அம்மாவைக் கொண்டாடும் ஒரு விழா.47 வருடங்களைக் கடந்து, உலகளவில் நம் அனைவரையும் அசத்தி வரும் அவரைக் கொண்டாடும் வகையில், இந்த விழாவை ஏற்பாடு செய்துள்ளோம். எந்த ஒரு பாடலையும் உடனடியாக ஸ்வரம் எழுதிப் பாடும் திறமை கொண்ட கலைஞர் சித்ரா அம்மா. அவர் இந்த தமிழ் மண்ணில் தான் தொடர்ந்து பாடி வருகிறார்.

அதனால் இந்த விழாவைச் சென்னையில், இங்கு நடத்துவது தான் சிறப்பாக இருக்கும். அவர் இந்த விழாவிற்கு ஒப்புக்கொண்டது எங்களுக்குப் பெருமை. இந்த நிகழ்ச்சியை நடத்த உதவிய கனரா வங்கிக்கு நன்றி. இந்த செய்தியை அனைத்து மக்களிடமும் கொண்டு சேர்க்குமாறு ஊடகங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கனரா வங்கி சார்பில் ஐசக் ஜானி பேசியதாவது....

சித்ரா அம்மா பெயரைச் சொன்னால் தெரியாதவர்கள் யாருமே இல்லை, இது வெறும் இசை நிகழ்ச்சி அல்ல, சித்ரா அம்மாவைக் கொண்டாடும் ஒரு நிகழ்வு. இந்த நிகழ்வை எங்களது கனரா வங்கி ஸ்பான்சர் செய்வது எங்களுக்குப் பெருமை. இந்த வாய்ப்பை வழங்கியதற்கு நன்றி. கனரா வங்கி சார்பில், உலகமெங்கும் உள்ள ரசிகர்களை இந்நிகழ்ச்சிக்கு வரவேற்கிறேன்.

நாய்ஸ் அண்டு கிரைன்ஸ் சார்பில் மஹாவீர் பேசியதாவது....

எங்களது எல்லா நிகழ்ச்சிகளிலும், நீங்கள் எல்லோரும் எப்போதும் துணை நிற்கிறீர்கள் நன்றி. நானும் கார்த்தியும் எப்போதும் அவரை சித்ரா அம்மா என்றே அழைப்போம். அது அன்பால் நிகழ்ந்தது. சிங்கப்பூரில் ஒரு நிகழ்ச்சியில் எஸ் பி பி சார் இருந்த போது ஒரு நிகழ்வு நடந்தது, எப்போதும் ஒரு சிலர் தான் நம்மைக் கவனித்து, தட்டிக்கொடுத்து, நீ சரியாகச் செய்து விடுவாய் என ஊக்கம் தருவார்கள், அதைப் புன்னகையுடன் எஸ் பி பி சார் செய்வார். அதன்பிறகு அதைச் செய்வது சித்ரா அம்மா தான். எப்போதும் பாஸிடிவிடி தருவார். நம் தமிழக மக்கள் போல இசை நிகழ்வை ரசிப்பது யாருமில்லை. எல்லாவிதமான இசையையும் ரசிப்பார்கள், அப்பா அம்மா எமோஷனல் கனக்ட்டும் இந்த ஊரில் இருக்கிறது. என் அப்பா அம்மவை அனுப்பி வைக்க வேண்டும் எனப் பலர் இந்நிகழ்ச்சிக்கு டிக்கெட் கேட்டார்கள், அது எங்களுக்குக் கிடைத்த ஆசீர்வாதம் தான். எங்களுக்கு இந்த வாய்ப்பை வழங்கிய சித்ரா அம்மாவிற்கு நன்றி. இ லவுன்ஜ் ஈவென்ட்ஸ் மற்றும் கனரா வங்கிக்கும் நன்றி. அனைவரும் காலத்தைத் திருப்பித் தரும், இந்நிகழ்ச்சியை ரசித்துக் கொண்டாடுங்கள் நன்றி.

பாடகி சின்னக்குயில் சித்ரா பேசியதாவது...

அனைவரும் வந்தது மிகுந்த மகிழ்ச்சி. நான் இதை எதிர்பார்க்கவில்லை, இதுவரை நான் பல இசை நிகழ்ச்சிக்குச் சென்று பாடியுள்ளேன், ஆனால் இந்த நிகழ்ச்சியை என்னைக் கொண்டாடும் நிகழ்வாக ஒருங்கிணைத்துள்ளார்கள். 3 மணி நேரம், மதுபால கிருஷ்ணன், சத்ய பிரகாஷ், திஷா பிரகாஷ், ருபா ரேவதி என நான்கு பாடகர்கள் என்னுடன் இணைந்து பாடவுள்ளனர். யூாப்புலரான பாடல்களைத் தேர்ந்தெடுத்துப் பாடவுள்ளோம். எனக்கு இத்தனை வருடங்கள் தந்து வரும் ஆதரவிற்கு நன்றி. இந்த நிகழ்ச்சிக்கும் ஆதரவு தந்து வெற்றி பெறச் செய்யுங்கள் நன்றி.

உலகளவில் பல நிகழ்ச்சிகளை சிறப்பாக ஒருங்கிணைத்து வழங்குவதில் புகழ்பெற்ற, ஐக்கிய அரபு எமிரேட், சவுதி அரேபியா, பஹ்ரைன், ஓமன், கத்தார், சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய யூனியன் மற்றும் செஷில்ஸ் உள்ளிட்ட நாடுகளில் பெரும் பாராட்டு பெற்ற நிகழ்ச்சிகள் பலவற்றை நடத்திய இ லவுன்ஜ் ஈவென்ட்ஸ் நிறுவனமும், திரைத்துறை ஜாம்பவான்கள் கலந்து கொள்ளும் பிரம்மாண்ட கலை நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக தயாரித்து, உருவாக்கி, நடத்துவதன் மூலம் இந்திய ஊடக வெளியில் தனக்கென ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ள நாய்ஸ் அண்டு கிரைன்ஸ் நிறுவனமும் இணைந்து, கனரா வங்கி ஆதரவுடன் இந்த இசைக்கச்சேரி நிகழ்ச்சியை நடத்தவுள்ளது.

'டைம்லெஸ் மெலோடிஸ் ஆஃப் எ லைஃப்டைம்: கே.எஸ். சித்ரா லைவ் இன் கான்செர்ட்' என பெயரிடப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சி சென்னை நந்தனத்தில் உள்ள ஒய்எம்சிஏ மைதானத்தில் பிப்ரவரி 8 சனிக்கிழமை மாலை ரசிகர்கள் முன்னிலையில் நடைபெறுகிறது, இதற்கான நுழைவுச் சீட்டுகள் இன்சைடர்.இன் மற்றும் புக் மை ஷோ இணையதளங்கள் மற்றும் செயலிகளில் கிடைக்கும்.

# 'டாக்டர் அம்பேத்கர்' படக்குழுவினரை பாராட்டிய விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன்



சென்னை, 31 ஜனவரி 2025: அர்ஜுன் நடித்த 'வாத்தியார்', ஆர்யா நடித்த 'ஓரம் போ', சத்யராஜ் நடித்த '6.2', மற்றும் 'நீ வேணும்டா செல்லம்' உள்ளிட்ட வெற்றிப் படங்களை வைத்தியநாதன் ஃபிலிம் கார்டன் பேனரில் தயாரித்த வி. பழனிவேல் தற்போது 'டாக்டர் அம்பேத்கர்' படத்தை பிரம்மாண்ட பொருட்செலவில் தயாரிக்கிறார்.

இப்படத்தில் விரைவில் வெளியாக உள்ள 'தேசியத் தலைவர்' படத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவராக வாழ்ந்திருக்கும் ஜெ.எம். பஷீர் அம்பேத்கராக நடிக்கிறார்.

வி. செந்தில்குமார் இயக்கத்தில் உருவாகும் இந்த வாழ்க்கை வரலாற்று திரைப்படத்திற்கு தேனிசைத் தென்றல் தேவா இசையமைக்கிறார்.

டாக்டர் அம்பேத்கர் பிறந்த ஊரான மத்திய பிரதேசத்தில் உள்ள மோவ், பயின்ற புனே, வாழ்ந்த மும்பை, அமைச்சராக பணியாற்றிய தில்லி, பாரிஸ்டர் பட்டம் பெற்ற லண்டன் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட இடங்களில் இப்படம் படமாக்கப்பட உள்ளது.

இந்திய அரசமைப்பு சட்டத்தை இயற்றியது டாக்டர் அம்பேத்கர் என்பது அனைவரும் அறிந்ததே. அவரது சிறப்புகளை உலக மக்களுக்கு எடுத்துக் கூறும் வகையில் அவரது வரலாறு தொடர்பான புத்தகங்களை ஆய்வு செய்து, அவரை பின்தொடர்வோரிடம் தகவல்களை பெற்று இந்த திரைப்படம் உருவாகிறது.

இது தொடர்பாக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவனை 'டாக்டர் அம்பேத்கர்' படக்குழுவினர் சந்தித்தனர். அப்போது, இப்படம் மாபெரும் வெற்றி பெற்று அம்பேத்கரின் கருத்துகளை உலகமெங்கும் கொண்டு செல்ல வேண்டும் என்று திருமாவளவன் மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்தார்.

அவரது அறிவுரைக்கு இணங்க, உலகளாவிய தலைவராக திகழும் டாக்டர் அம்பேத்கர் வாழ்க்கை வரலாற்றை திரையில் வெளிப்படுத்தும் முயற்சியான 'டாக்டர் அம்பேத்கர்' திரைப்படம் பல்வேறு மொழிகளில் பான் வேர்ல்டு திரைப்படமாக உருவாகவுள்ளது. இதன் படப்பிடிப்பு விரைவில் தொடங்குகிறது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# தீண்டாமை துளியும் இல்லாத இந்தியாவை கட்டமைப்போம்: எடப்பாடி பழனிசாமி உறுதி



சென்னை, 31 ஜனவரி 2025: தீண்டாமை துளியும் இல்லாத சமத்துவ நாடாக இந்தியாவைக் கட்டமைப்போம் என எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

காந்தியடிகள் நினைவு நாளை முன்னிட்டு அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:

அறவழியில் ஆங்கிலேயரை வென்ற அமைதிப்புரட்சியாளர், சத்திய வழியை மானுட உலகத்திற்கு காட்டிய வழிகாட்டி,

நம் இந்தியத் திருநாட்டின் கொள்கைத் தந்தை அண்ணல் காந்தியடிகளின் நினைவுநாளில், மகாத்மாவின் பெரும் புகழைப் போற்றி வணங்குகிறேன்.

நாட்டின் சமத்துவத்திற்காக தன்னையே தியாகம் செய்த அண்ணல் காந்தியடிகளின் நினைவுநாளில், நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்த உத்தமர்கள் அனைவரையும் நினைவுகூர்வதுடன், தீண்டாமை துளியும் இல்லாத சமத்துவ நாடாக இந்தியாவைக் கட்டமைக்க உறுதியேற்போம்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



# இந்த காதலர் தினத்தன்று, ☼ஆஹா தமிழ்☼ அதன் புதிய வெப் சீரிஸ் ☼“மதுரைப் பையனும் சென்னைப் பொண்ணும்“☼ மூலம் ஒரு புத்துணர்ச்சியூட்டும் காதலைக் கொண்டுவருகிறது.

சென்னை, 31 ஜனவரி 2025: மதுரை பையனுக்கும் சென்னைப் பெண்ணுக்கும் இடையிலான கலாச்சார மற்றும் தனிப்பட்ட வேறுபாடுகளை ஆராயும் ஒரு மனதைக் கவரும் வெப் சீரிஸ் ஆக தயாரிக்கப்பட்டுள்ளது.

பிரபல இணைய மற்றும் தொலைக் காட்சி தொகுப்பாளினி ஏஞ்செலின் இந்த தொடரின் மூலமாக கதாநாயகியாக அறிமுகமாகிறார். இவருக்கு இணையாக தொடரின் நாயகனாக கண்ணா ரவி நடிக்கின்றார். இவர்களுடன் ரே”ணுகா, குரேஷி, ஷ்யாமா ஷர்மி மற்றும் பலர் இணைந்து நடிக்கின்றனர்.

விக்னேஷ் பழனிவேல் இயக்கும் இந்த வெப் சீரிஸ் ஆஹா தமிழ் ஓடிடி தளத்தில் வரும் பிப்ரவரி 14 அன்று வெளியாகவுள்ளது. காதலை கொண்டாடும் இந்த தொடரை காதலர் தினத்தன்று ஆஹா ஓடிடி தளத்தில் காணத்தவறாதீர்கள்.




# பேஸ்புக், இன்ஸ்டாகிராம் பக்கங்களை முடக்கிய வழக்கு அதிபர் டிரம்ப்புக்கு 22 மில்லியன் டாலர் நிவாரணம்: மெட்டா நிறுவனம் முடிவு

சென்னை, 31 ஜனவரி 2025: பேஸ்புக், இன்ஸ்டாகிராம் பக்கங்களை முடக்கிய வழக்கில், அமெரிக்க அதிபர் டிரம்ப்புக்கு 22 மில்லியன் டாலர் நிவாரணம் வழங்க மெட்டா நிறுவனம் முடிவு செய்துள்ளது.

அமெரிக்காவில் கடந்த 2021ம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலில் ஜோ பிடன் வெற்றி பெற்றார். அப்போது, தோல்வியை தழுவிய டிரம்ப், அதனை ஏற்க முடியாமல், தனது ஆதரவாளர்களிடம் வன்முறையை தூண்டும் வகையில் பேசினார்.

மேலும், தனது பேச்சை சமூக வலைதளங்களிலும் வெளியிட்டார். அவரது பேச்சால் தூண்டப்பட்ட ஆதரவாளர்கள், ஜோ பிடன் அதிபராக பதவி ஏற்க இருந்த தலைமை செயலக கட்டிடத்திற்குள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து, டிரம்ப்பின் பேஸ்புக், டுவிட்டர், இன்ஸ்டா அதிகாரப்பூர்வ கணக்குகள் முடக்கப்பட்டன.

தன் மீது அவதூறு சுமத்தி, தன்னுடைய பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் பக்கத்தை முடக்கி விட்டதாக டிரம்ப் வழக்கு தொடர்ந்தார்.

யூற்போது அவர் மீண்டும் அதிபரான நிலையில், இந்த வழக்கில் பணிந்து போக மெட்டா நிறுவனம் முடிவு செய்துள்ளது.

கணக்கை முடக்கியதால் பாதிக்கப்பட்ட டிரம்புக்கு 22 மில்லியன் பூலர் நிவாரணம் வழங்க மெட்டா முன்வந்துள்ளது. இது, இந்திய மதிப்பில் 190 கோடி ரூபாய் ஆகும்.

இது தொடர்பாக அந்நிறுவனத்தின் சி.இ.ஓ. மார்க் ஜூகர்பெர்க் தரப்பு வக்கீல், கலிபோர்னியா கோர்ட்க்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில், 'இருதரப்பிலும் உடன்பாடு ஏற்பட்டு விட்டதால், இந்த வழக்கை விரைவில் முடித்துக் கொள்கிறோம்' எனக் குறிப்பிட்டிருந்தார். ஆனால், தொகை தொடர்பாக எந்த விபரமும் குறிப்பிடவில்லை.

# ஸ்கிரீன் சீன் மீடியா என்டர்டெயின்மென்ட் சுந்தர் ஆறுமுகம் தயாரிப்பில் 'டாடா' இயக்குநர் கணேஷ் கே பாபு இயக்கத்தில் ரவி மோகன் நடிக்கும் 'கராத்தே பாபு' அரசியல் திரில்லர் திரைப்படம் வேகமாக உருவாகி வருகிறது



சென்னை, 31 ஜனவரி 2025: தமிழக டிஜிபி சங்கர் ஜிவாலின் மகள் தவ்தி ஜிவால், ரவி மோகன் ஜோடியாக அறிமுகமாகிறார்

பல வெற்றிப் படங்களையும் 'மத்தகம்' இணையத் தொடரையும் தயாரித்துள்ள ஸ்கிரீன் சீன் மீடியா என்டர்டெயின்மென்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், 'அகிலன்' மற்றும் 'பிரதர்' திரைப்படங்களுக்கு பிறகு மூன்றாவது முறையாக ரவி மோகன் உடன் இணைந்துள்ளது.

சுந்தர் ஆறுமுகம் பிரம்மாண்ட பொருட்செலவில் தயாரிக்கும் 'கராத்தே பாபு' படத்தை 'டாடா' வெற்றிப் படத்தை இயக்கிய கணேஷ் கே பாபு இயக்குகிறார்.

ரவி மோகனின் 34-வது படமாக உருவாகி வரும் இதில் தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவாலின் மகள் தவ்தி ஜிவால் நாயகியாக அறிமுகமாக இவர்களுடன் முக்கிய வேடங்களில் இயக்குநர் கே.எஸ்.ரவிகுமார், சக்தி வாசு, நாசர் ஆகியோர் நடிக்கின்றனர்.

படம் குறித்து பேசிய இயக்குநர் கணேஷ் கே பாபு, "அரசியல்வாதிகள் குறித்து எத்தனையோ திரைப்படங்கள் வந்திருந்தாலும் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை, உறவுகள் மற்றும் உணர்வுகள் குறித்து பெரிதாக திரையில் பேசப்படவில்லை.

இந்த திரைப்படம் ஒரு சட்டமன்ற உறுப்பினரின் இன்னொரு பக்கம் குறித்து அலசுகிறது. உணர்வுப் பூர்வமான அரசியல் திரில்லராக இது உருவாகி வருகிறது," என்று தெரிவித்தார்.

ரவி மோகனுடன் பணியாற்றுவது குறித்து பேசிய அவர், "ஒரு முன்னணி நடிகருடன் வேலை செய்வது போல இல்லாமல் எந்த டென்ஷனும் இன்றி மிகவும் கூலாக இப்படத்தை உருவாக்கி வருகிறோம்.

இதற்கு காரணம் ரவி மோகன் வழங்கும் முழு ஒத்துழைப்பும், அர்ப்பணிப்பும் தான். இதை மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன்.

இத்திரைப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் தொடங்கப்பட்டு முதல் கட்டம் நிறைவடையும் தருவாயில் உள்ளது. பல்வேறு இடங்களில் படப்பிடிப்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இசை - சாம் சி எஸ்.

ஒளிப்பதிவு - எழில் அரசு கே படத்தொகுப்பு - கதிரேஷ் அழகேசன்.

தயாரிப்பு வடிவமைப்பு - சண்முகராஜா.

இதர நடிகர்கள் மற்றும் படக்குழுவினர் விவரம்:

நடிகர்கள்: வி.டி.வி கணேஷ், சுப்ரமணியம் சிவா, கவிதாலயா கிருஷ்ணன், பிரதீப் ஆண்டனி, ராஜா ராணி பாண்டியன், இலன், சாம் ஆண்டர்சன், ஸ்ரீ தன்யா, சந்தீப் ரவி ராஜ், ஆனந்தி, சிந்து பிரியா, அஜித் கோஷ், கல்கி ராஜா, நைஃப் நரேன், வெற்றி, அரவிந்த், தர்மராஜ், நந்தினி செந்தமிழன், ஜீவா சுப்ரமணியம், மணிமேகலா

இணை எழுத்தாளர்கள்: ரத்ன குமார், பாக்கியம் சங்கர்.

சண்டை பயிற்சி: திலிப் சுப்பராயன்

ஒலி வடிவமைப்பாளர்: அருணாச்சலம் சிவலிங்கம்.

நடன இயக்குநர்: சதீஷ் கிருஷ்ணன்.

ஆடை வடிவமைப்பாளர்: காயத்ரி பாலசுப்ரமணியன்.

தயாரிப்பு நிர்வாகி: கார்த்திக் ஆனந்த்கிருஷ்ணன்.

நிர்வாகத் தயாரிப்பாளர்: கே.எஸ். செந்தில் குமார்.

விநியோகத் தலைவர்: கிரண் குமார் எஸ்.

கோ டைரக்டர்: எஸ் ஏ பாஸ்கரன்.

தயாரிப்பு: சுந்தர் ஆறுமுகம்.

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்: கணேஷ் கே பாபு.




# மவுனி அமாவாசையையொட்டி பிரயாக்ராஜிலிருந்து 364 ரயில்கள் இயக்கப்பட்டன: அஸ்வினி வைஷ்ணவ்



சென்னை, 31 ஜனவரி 2025: மவுனி அமாவாசை நாளில் சங்கமத்தில் புனித நீராடியபிறகு வீடு திரும்பும் பக்தர்களின் வசதிக்காக இந்திய ரயில்வே பிரயாக்ராஜின் பல்வேறு நிலையங்களில் இருந்து 364 வெளியூர் ரயில்களை இயக்கியது. இது பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவின் போது ஒரே நாளில் இயக்கப்பட்ட ரயில்களின் எண்ணிக்கையில் புதிய சாதனையாகும். இதனுடன், இந்த காலகட்டத்தில் 77 உள்ளூர் ரயில்களையும் ரயில்வே துறை இயக்கியது. வெளியூர்களுக்கு வழக்கமாக இயக்கப்படும் 142 ரயில்களுடன் மகா கும்பமேளாவுக்காகவே 222 சிறப்பு ரயில்களும் இயக்கப்பட்டன.

இது குறித்து புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், மவுனி அமாவாசை தினத்தன்று பிரயாக்ராஜிலிருந்து 364 ரயில்கள் இயக்கப்பட்டதாகத் தெரிவித்தார். ரயில்வே துறையின் அனைத்து உயர் அதிகாரிகளின் குழுவும் ரயில்வே தலைமையகத்தில் அமைந்துள்ள கட்டுப்பாட்டு அறையிலிருந்து முழு நிலைமையையும் நிகழ்நேரத்தில் கண்காணித்து வருவதாகவும், மாநில அரசுடன் தொடர்ந்து ஒருங்கிணைந்து ரயில்கள் இயக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

மவுனி அமாவாசை அன்று, வட மத்திய ரயில்வே உள்ளூர், வெளியூர் உட்பட மொத்தம் 280 ரயில்களை இயக்கியது. அதே நேரத்தில் வடகிழக்கு ரயில்வே 73 ரயில்களையும், வடக்கு ரயில்வே 88 ரயில்களையும் இயக்கின. வட மத்திய ரயில்வே அதிகபட்சமாக 157 மகா கும்பமேளா சிறப்பு ரயில்களை இயக்கியுள்ளது.

மேளாவின் முழு காலகட்டத்தில், 10,028 வழக்கமான ரயில்கள் மற்றும் 3400 க்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்கள் உட்பட சுமார் 13,450 ரயில்களை இயக்க ரயில்வே திட்டமிட்டுள்ளது.

இதுவரை, 1900-க்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டுள்ளன. அனைத்து ரயில்களும் திட்டமிட்டபடி இயக்கப்படுவதாக ரயில்வே தெளிவுபடுத்தியுள்ளது.

# வீட்டு நுகர்வுப் பொருட்கள் செலவு கணக்கெடுப்பு: 2023-24



சென்னை, 31 ஜனவரி 2025: நாட்டின் முக்கிய மாநிலங்களில் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களுக்கிடையேயான நுகர்வுப் பொருட்கள் செலவு வேறுபாட்டில் தொடர்ச்சியான சரிவு ஏற்பட்டு வருகிறது.

கிராமப்புறங்கள், நகர்ப்புறங்களில் உள்ள அனைத்து வித வீடுகளிலும் சராசரியாக மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவு அதிகரித்து வருகிறது.

நகர்ப்புறம், கிராமப்புறங்களில் இந்தச் சமநிலையற்ற தன்மை குறைந்து வருகிறது.

மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் 2022-23, 2023-24 ஆகிய இரண்டு ஆண்டுகளில் நடத்த திட்டமிட்டு இருந்த குடும்ப நுகர்வு செலவினங்கள் குறித்த தொடர் கணக்கெடுப்புகளில் இரண்டாவது முறையாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகள் 2024-ம் ஆண்டு டிசம்பர் 27-ம் தேதி வெளியிடப்பட்டது. முன்னதாக 2022-23-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விரிவான அறிக்கை 2024-ம் ஆண்டு ஜூன் மாதம் வெளியிடப்பட்டது.

வீட்டு நுகர்வு செலவுகள் குறித்த கணக்கீடுகள் பொருட்கள் மற்றும் சேவைகளில் குடும்பங்களின் நுகர்வு, செலவு குறித்த தகவல்களை சேகரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பொருளாதார முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கும், நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணைக் கணக்கிடுவதற்கும் இந்தத் தரவுகள் உதவுகின்றன. சேகரிக்கப்பட்ட தரவுகள் வறுமை, சமத்துவமின்மை, சமூக விலகல் போன்ற அம்சங்களை அளவிடப் பயன்படுத்தப்படுகிறது.

# தங்கம் விலை இன்று மேலும் ரூ.120 உயர்வு

சென்னை, 31 ஜனவரி 2025: சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப இந்தியாவில் தங்கத்தின் விலை அவ்வப்போது உயர்ந்தும், குறைந்தும் வருகிறது. ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்டு வந்த தங்கம் விலை கடந்த அக்டோபர் மாதம் 30-ம் தேதி ஒரு சவரன் ரூ.59 ஆயிரத்தை கடந்து புதிய உச்சத்தை தொட்டது.

அதனை தொடர்ந்து நவம்பர் மாத தொடக்கத்தில் இருந்தே தங்கம் விலை ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்டு வருகிறது.

அந்த வகையில், நேற்று தங்கம் விலை நேற்று புதிய உச்சமாக சவரனுக்கு ரூ.60,760-க்கு விற்பனையானது. இந்த நிலையில் இன்றும் தங்கம் விலை சற்று உயர்ந்துள்ளது. அதன்படி சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு 120 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ரூ.60,880-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கிராமுக்கு கிராமுக்கு 15 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் தங்கம் ரூ.7,610-க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையும் கிராமுக்கு 2 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி 106 ரூபாய்க்கும், கிலோவுக்கு இரண்டாயிரம் ரூபாய் உயர்ந்து பார் வெள்ளி 1,06,000 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
வெள்ளி, ஜனவரி 31, 2025

# சரக்கு மற்றும் சேவை வரி சட்டத்தில் பொது மன்னிப்பு திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்றது

சென்னை, 31 ஜனவரி 2025: ஜிஎஸ்டி கவுன்சில் அண்மையில் அறிவித்த பொது மன்னிப்பு திட்டங்கள் குறித்து சென்னை வெளி ஆணையரகத்தின் மத்திய ஜிஎஸ்டி மற்றும் மத்திய கலால் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட ஜிஎஸ்டி வரி செலுத்துவோருக்கு விரிவான விழிப்புணர்வு நிகழ்ச்சி வியாழக்கிழமை அன்று ஸ்ரீபெரும்புதூரில் உள்ள இருங்காட்டுக்கோட்டையில் நடைபெற்றது.




வணிகர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில், ஜிஎஸ்டி கவுன்சில் வரி இணக்க நடைமுறைகளை எளிதாக்க புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன்படி ஜிஎஸ்டி குழுமத்தின் 54-வது கூட்டத்தில், சரக்கு மற்றும் சேவை வரி சட்டத்தில் ஒரு முக்கிய மாற்றத்தை அறிமுகப்படுத்தியது.

இது பழைய வழக்குகளில் உள்ள நிலுவைத் தொகை குறித்த நடைமுறைகளில் வரி செலுத்துவோருக்கு உதவும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய விதிமுறையின் கீழ், வர்த்தகர்கள் 2017-18-ம் ஆண்டு முதல் 2019-20-ம் ஆண்டு வரையிலான சரக்கு மற்றும் சேவை வரி நிலுவைத் தொகை, அதற்கான வட்டி மற்றும் அபராதம் ஆகியவற்றின் மீது சிஜிஎஸ்டி சட்டம், 2017-ன் பிரிவு 73-ன் கீழ் நிவாரணம் பெற விண்ணப்பிக்கலாம்.

வணிகர்கள் எதிர்கொள்ளும் நீண்டகால பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் தாமதமான உள்ளீட்டு வரி கடன் தொடர்பான உரிமைகோரல்களுக்கு ஜூலை 2017 முதல் மார்ச் 2021 வரையிலான காலத்திற்கான உள்ளீட்டு வரிக் கடனை தாமதமாகப் பெறுவது தொடர்பான வரி கோரிக்கைகளை முறைப்படுத்துவதற்கான கால வரம்பை 2021 நவம்பர் 30-ம் தேதி வரை நீட்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வரி தொடர்பான வழக்குகளைக் குறைப்பதில் உள்ள முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு சென்னை வெளிப்புற சி ஜி எஸ் டி ஆணையரகம், ஜிஎஸ்டி பொது மன்னிப்புத் திட்டங்கள் குறித்து வரி செலுத்துவோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான பணியைத் தொடங்கியுள்ளது. கூடுதலாக, இத்தகைய நடவடிக்கைகள் வரி தொடர்பான சிக்கல்களுக்கு தீர்வு காண்பதற்கான கருத்துக்களை சேகரித்தல், குறைகளை நிவர்த்தி செய்தல் மற்றும் ஜிஎஸ்டி தொடர்பாக வரி செலுத்துவோர் எதிர்கொள்ளும் நடைமுறை சவால்கள் அல்லது சிரமங்களை அடையாளம் கண்டு தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நிகழ்ச்சியில் உரையாற்றிய சென்னை புறநகர் ஆணையரகத்தின் ஜிஎஸ்டி மற்றும் மத்திய கலால் ஆணையர் திரு எஸ்.நாசர் கான், ஜிஎஸ்டி துறைக்கும், வரி செலுத்துவோருக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதில் இத்தகைய திட்டங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

இதுபோன்ற முயற்சிகள் வரி செலுத்துவோருக்கு அது தொடர்பான புரிதலை ஏற்படுத்தவும் பொது மன்னிப்பு திட்டங்களுக்கான அணுகுமுறையை மேற்கொள்ளவும் உதவிடும் என்று கூறினார்.

வரி தொடர்பான தகராறுகளைக் குறைப்பதிலும், வணிகத்திற்கு உகந்த வரிவிதிப்பு சூழல் அமைப்பை உருவாக்குவதிலும் இத்தகைய திட்டங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் கூறினார்.

கூடுதல் ஆணையர் (சிஜிஎஸ்டி) திரு ரஞ்சித்குமார், இணை ஆணையர்கள் (சிஜிஎஸ்டி) திரு கே எஸ் ரமேஷ் பாரதி மற்றும் ஆர்.ஜே.முரளி ராவ், உதவி ஆணையர் (சிஜிஎஸ்டி) திரு பிரசாத் கிருஷ்ணன் உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இந்த முயற்சியில் தமிழ்நாடு மாநில ஜிஎஸ்டி துறையின் துணை ஆணையர்களும் பங்கேற்றனர்.

# தமிழக அஞ்சல் துறையின் 14-வது மாநில அளவிலான தபால்தலை கண்காட்சியின் இன்றைய கருப்பொருள் "தமிழ்நாட்டின் இயற்கை அதிசயங்கள்"

சென்னை, 31 ஜனவரி 2025: இன்றைய சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு தமிழக அரசின் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலர் திரு பி.செந்தில் குமார் இஆப, தமிழ்நாடு வனப்படையின் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் திரு ஸ்ரீனிவாஸ் ஆர். ரெட்டி, இவப, ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.



"தமிழ்நாட்டின் இயற்கை அதிசயங்கள்" என்கின்ற தலைப்பில் சிறப்பு அஞ்சல் முத்திரை, ஆர்கிட் மற்றும் அயல் நாட்டு பறவைகள் குறித்த புத்தகத் தொகுப்பை தமிழ்நாடு வட்டம் முதன்மை அஞ்சல் துறை தலைவர் வெளியிட, சிறப்பு விருந்தினர்கள் பெற்றுக் கொண்டனர்.

மேலும் இக்கண்காட்சியின் இரண்டாம் நாள் நிகழ்வான இன்று பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன அவை பின்வருமாறு :

1. புவிசார் குறியீடு ஆத்தூர் வெற்றிலை படம் அச்சிடப்பட்ட சிறப்பு உறையை திருமதி. மரியம்மா தாமஸ் வெளியிட, தூத்துக்குடி என்எல்சி தமிழ்நாடு மின்சார நிறுவன முதன்மை செயல் அலுவலர் திரு கே அனந்தராமானுஜம் மற்றும் ஆத்தூர் வட்டார வெற்றிலை விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் பெற்றுக் கொண்டனர்.

2. புவிசார் குறியீடு மதுரை சோழவந்தான் வெற்றிலை படம் அச்சிடப்பட்ட சிறப்பு உறையை திருமதி. மரியம்மா தாமஸ் வெளியிட வெள்ளாளர் உறவின்முறை சங்கத் தலைவர் திரு எஸ் சுகுமார் வெற்றிலை கொடிகள் விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. எஸ் திரவியம் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

3. பறவைகள் சூழல் அமைப்பின் பட அஞ்சல் அட்டையை திருமதி மரியம்மா தாமஸ் வெளியிட்டார். பறவை ஆராய்ச்சியாளரும், கலைஞருமான திரு. ஆர் சிவக்குமார் பெற்றுக்கொண்டார்.

4. அஞ்சல்தலை சேகரிப்பின் ஆர்வம் என்கின்ற தலைப்பிலான பயிலரங்கை அஞ்சல்தலை சேகரிப்பு ஆர்வலர் திரு. பி ஸ்ரீதரன் நடத்தினார்.

5. "வேடந்தாங்கலில் இடம் பெயர்ந்த பறவை" என்கின்ற தலைப்பிலான கருத்தரங்கை சென்னை வனவாழ்வியல் பாதுகாவலர் திரு மனிஷ் மீனா, இவப தலைமையில் நடைபெற்றது.

6. மேலும் அஞ்சல் ஊழியர்களுக்கு இறகு எழுத்துகள் என்கின்ற தலைப்பிலான பயிலரங்கை தூரிகை கலைஞர் செல்வி ஏ ஜெயப்ரீத்தி நடத்தினார்.

சுமார் 3295 பள்ளி குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் இக்கண்காட்சியில் கலந்து கொண்டனர். இதில் பள்ளி குழந்தைகள் மிகுந்த ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும், நாட்டின் கலாச்சாரம் இயற்கை அதிசயம் குறித்து இக்கருத்தரங்கு மூலம் அறிந்து கொண்டனர். இரண்டாம் நாளின் முடிவில் சுமார் 5500 பேர் இந்தக் கண்காட்சியை கண்டு ரசித்தனர்.

கண்காட்சியில் இடம் பெற்றிருந்த மெய்நிகர் அரங்கு பள்ளி குழந்தைகள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றது.

பிலா ஹன்ட் எனும் பயிலரங்கம், பரதம் இயல், இசை, நடனம் நாடகம் மற்றும் உலக போஸ்ட் கிராஸிங், சூறாவளி சம்பந்தமான கருத்தரங்கம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் வரும் நாட்களில் பள்ளி குழந்தைகளின் ஆர்வத்தை தூண்டும் வகையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சி வரும் பிப்ரவரி ஒன்றாம் தேதி காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை நடைபெற உள்ளது. இக்கண்காட்சியை பார்வையிட வரும் அனைவருக்கும் அனுமதி இலவசம்.

# தாம்பரம் மாநகராட்சியை கண்டித்து அண்ணா தி.மு.க. ஆர்ப்பாட்டம்: முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் பங்கேற்பு

சென்னை, 31 ஜனவரி 2025: சென்னையை அடுத்த தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பெருங்களத்தூர் மற்றும் பீர்க்கன்காரணை பகுதியில் அடிப்படை வசதிகளை நிறைவேற்றாத தி.மு.க. அரசு மற்றும் தாம்பரம் மாநகராட்சி நிர்வாகத்தை கண்டித்து செங்கல்பட்டு மேற்கு மாவட்ட அண்ணா தி.மு.க. சார்பில் பெருங்களத்தூரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமார் தலைமையில், மாவட்ட செயலாளர் சிட்லபாக்கம் ச.ராசேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. முன்னாள் அமைச்சர் டி.கே.எம்.சின்னையா உள்பட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு தாம்பரம் மாநகராட்சியை கண்டித்தும், தி.மு.க. அரசை கண்டித்தும் கோஷங்கள் எழுப்பினர்.

கழக மகளிர் அணி இணைச் செயலாளர் கணிதா சம்பத், மாவட்ட துணை செயலாளர் ப.தன்சிங், வர்த்தக அணி துணைச்செயலாளர் கே.எஸ்.மலர்மன்னன், பரங்கிமலை முன்னாள் ஒன்றிய குழு தலைவர் என்.சி. கிருஷ்ணன், பகுதி கழக செயலாளர்கள் பா. அப்பு(எ)வெங்கடேசன், த.ஜெயபிரகாஷ், எம்.கே.வெ. ஜெகநாதன், இரா. மோகன், எம்.கே. சதீஷ், எல்லார் செழியன், எம். கூத்தன், ஏ. கோபிநாதன், ஆர்.அருணாசலம், அணி செயலாளர்கள் ஜி.எஸ்.புருஷோத்தமன், பா.ராஜப்பா, எம்.ஜி.கே. கோபிகண்ணன், க. விஜயசங்கர், பா. காசிராஜன், அண்ணா தொழிற்சங்க தலைவர் பி.ஆர். சரவணராஜ், தாம்பரம் மாநகராட்சி எதிர்கட்சி தலைவர் சேலையூர் ஜி. சங்கர், மாமன்ற உறுப்பினர் அ.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட கவுன்சிலர் எம். கஜா(எ)கஜேந்திரன்,



இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை பொருளாளர் ஆர்.சங்கர் கணேஷ், மாணவரணி இணைச் செயலாளர்கள் டாக்டர் டி. மோசஸ் ஜோஸ்வா, கீழ்கட்டளை ஞா. சந்திரசேகர் ராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் நிருபர்களிடம் முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் கூறியதாவது :-

பேரூராட்சியாக இருந்த பீர்க்கன்காரணையை தாம்பரம் மாநகராட்சியில் இணைத்தும் எந்த ஒரு வளர்ச்சி பணிகளும் நடைபெறவில்லை. பெருங்களத்தூர் பகுதியில் கட்டப்பட்டு இருக்கும் மேம்பாலங்களும் அண்ணா தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்டது தான். மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பிறகும் இந்த பகுதியில் அடிப்படை வசதிகளை செய்யவில்லை.

எங்கள் ஆட்சியில் சுதந்திரமாக இருந்த காவல்துறையின் கைகள், தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்டுள்ளது. முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் வீடுகளுக்கு மட்டுமே பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் முதல் தகவல் அறிக்கை வெளியான விவகாரத்தில் சிறப்பு புலனாய்வு குழுவினர் பத்திரிகையாளர்களிடம் செல்போன்களை பறிமுதல் செய்வது எந்த விதத்தில் நியாயம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# இந்திய கடல்சார் பல்கலைக்கழகம், இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹோட்டல் மேனேஜ்மென்ட் சென்னை, சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் பயிற்சிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து

சென்னை, 31 ஜனவரி 2025: 2025-ம் ஆண்டு ஜனவரி 30-ம் தேதி, சென்னையில் உள்ள இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹோட்டல் மேனேஜ்மென்ட் கேட்டரிங் டெக்னாலஜி & அப்ளைடு நியூட்ரிஷன் இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இதன் மூலம் பயணக் கப்பல்களில் விருந்தோம்பல் சேவைகள், தேசிய மற்றும் சர்வதேச கப்பல் துறையில் பயிற்சி பெற்ற மனிதவளத்திற்கான அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்ய திறன்வாய்ந்த பணியாளர்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.



2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் தொடங்கி வைத்த குரூஸ் இந்தியா இயக்கத்தின் கீழ் இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதை இந்தக் கூட்டமைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த பணி, விருந்தோம்பல் மற்றும் கடல்சார் துறைகளில் தொழில் வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு உதவிடும். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம், இரு நிறுவனங்களும் குறுகிய கால படிப்புகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் பயணக் கப்பல்களில் பணியைத் தொடர ஆர்வமுள்ள மாணவர்களுக்கு பயிற்சி வழங்குவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவிடும்.

இந்த கூட்டாண்மையின் முக்கிய அம்சங்கள்:

எஸ்டிசிடபிள்யூ பாதுகாப்பு பயிற்சி, பயணிகள் கப்பல் அறிமுகம் மற்றும் டிஜிஎஸ் - அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் உட்பட வர்த்தக கப்பல் மற்றும் பயணிகள் கப்பல்களின் சான்றிதழ்களை இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் வழங்கும்.

இந்திய ஹோட்டல் மேலாண்மை நிறுவனம் சென்னை, மென்திறன்கள், உணவு பழக்க வழக்கங்கள், உணவு பாதுகாப்பு, விருந்தோம்பல் நடைமுறைகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கும்.

இந்திய ஹோட்டல் மேலாண்மை நிறுவனத்தில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு தேவையான கடல்சார் படிப்புகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குதல்.

ஐஎச்எம் சென்னை மற்றும் ஐஎம்யூ மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல், கப்பல் மற்றும் விருந்தோம்பல் தொழில்களில் வேலை வாய்ப்புகள் குறித்து ஆராய்தல்.

நேரடி அனுபவத்திற்காக, கடல்சார் துறைமுகங்கள் மற்றும் அங்கு நிறுத்தப்பட்டுள்ள கப்பல்களில் அழைத்துச் சென்று காண்பிக்க ஏற்பாடு செய்தல்.

இந்த ஒப்பந்தம் கடல்சார் சுற்றுலாவில் திறன்வாய்ந்த நிபுணர்களுக்கான எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்வதுடன், நாட்டின் கடல்சார் துறையை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்கு உதவிடும் இந்த இரண்டு நிறுவனங்களின் நிபுணத்துவத்தைப் முறையாக பயன்படுத்துவதன் மூலம், 2047-ம் ஆண்டில் பிரதமரின் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான செயல்பாடுகள் மேம்படும். இந்தியாவில் கடல்சார் சுற்றுலா, அது தொடர்பான விருந்தோம்பல் சேவைகளின் வளர்ச்சிக்கு பங்களிக்க இந்த ஒப்பந்தம் வழிவகுக்கிறது.